## நீலகிரியில் இருக்கும் புனித மரங்கள்

# பிக்கெ மரம்



**(பிக்கெ மரம், விக்கி மரம்) ஆலிவ் மரக் குடும்பத்தை இது சார்ந்தது.**

*Elaeocarpus serratus L.*- Wild Olive


வனங்களிலும் சோலைகளிலும் புனித மரங்கள், மற்ற மரங்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டு, தனியாகவோ, அல்லது ஒரு இனமாகவோ, போற்றப்பட்டு வழிபடப்படுகின்றன. நீலகிரியிலும், இந்தியாவில் மற்ற இடங்களிலும், இந்த மரங்கள் மக்களின் குடியிருப்புக்களின் உள்ளே அல்லது கிராம முகப்பில் காணப்படும்.





நீலகிரியில் படுகர் இனத்தார் பிக்கெ மரத்தை புனித மரமாகப் கருதுகின்றனர் ருத்ராக்ஷ மரமும், பிக்கே மரமும் ஒரே இனத்தை சேர்ந்தவை. இந்த இனத்தைச்சேர்ந்த மரங்களுக்கு ஒரு சிறப்பான அம்சம் இருக்கிறது. இந்த மரங்களின் இலைகள் முதிர்ந்து கீழே விழுவதற்கு முன் சிவப்பு நிறமாக மாறும். பசுமை மாறாத காடுகளின் தரையில் சிவப்பு நிற இலைகள் காணப்பட்டால் அது இந்த இனத்தைச்சேர்ந்த மரங்கள் இருப்பதற்கு அடையாளம் ஆகும்.

இந்த மரங்கள் தென்-கிழக்கு ஆசியா கண்டத்திலும், இந்தியாவிலும் காணப்படுகின்றன. இதன் பூக்கள் இளஞ்சிவப்பு அல்லது சிவப்பாக இருக்கும். ஏப்ரல், மே மாதங்களிலும், மறுபடியும் ஜுலை, ஆகஸ்டு மாதங்களிலும் பூக்கும். அழுகும் இறைச்சி தின்னும் ஈ பூச்சிகள் இந்த பூக்களைத்தேடி வருகின்றன. மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பச்சை நிறப்பழங்கள் வெளிப்படும். பழத்தின் உள்ளே கடினமான கொட்டை காணப்படும்.






இந்த பழங்களில் மாச்சத்தும் சர்க்கரையும் அதிகமாகவும் குறைந்த அளவில் புரதம், இரும்பு முதலிய சத்துக்களும் இருக்கின்றன. நீலகிரியில் தெரு கடைகளில் பழ வியாபாரிகள் இந்த பழங்களை விற்பதைப் பார்க்கலாம்.

ஹட்டி என்று அழைக்கப்படும் படுகர் கிராமங்களில், புனித மரங்கள் நிறைய இருக்கும். அவற்றில் பிக்கெ மரம் முக்கிய இடம் பெற்று இருக்கிறது. அதைச் சுற்றி கல் இருக்கை கட்டி இருப்பார்கள். பிக்கே மரம் நீர் இருப்பதை சுட்டிக்காட்டும். ஏனென்றால், அதன் அடியில் எப்பொழுதும் ஊற்றுகள் இருக்கும். கிளைகள் வெட்டப்படுவதில்லை. முதிர்ந்த பழங்கள் தரையில் விழுந்தப்பிறகு சேகரித்து உண்ணப்படுகின்றது. எந்த அசுத்தமும் அணுக விட மாட்டார்கள். இந்த மரம் கிராமத்தில் இருப்பதனால், காற்று சுத்தமாகவும், நோய்கள் வராமலும் வாழ முடிகின்றது என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். கலாச்சார நோக்கங்களுக்காக இந்த மரத்தின் இனமான ருத்ராக்ஷ மரத்தின் கொட்டைகள் முக்கியமாக வட இந்திய பகுதிகளில் பறிக்கப்பட்டு வருவதால் அங்கு அவை அழிந்து வருகின்றன. இதிலிருந்து நாம் அறிவது, எல்லா புனித மரங்களும் பாதுகாக்கப்படுவதில்லை என்பது. தற்பொழுது பிக்கெ மரம் கிராமத்து எல்லையுள் பாதுகாக்கப்படுகிறது. ஆனால், அவற்றின் இருப்பிடமான காடுகளில் அவற்றின் நிலை என்ன? இதனைக் குறித்த விரிவான கள ஆய்வு செய்யப்படவேண்டும்.

## நீலகிரியில் இருக்கும் மற்ற புனித மரங்கள்

படுகர் இனத்தார் மற்ற சில மரங்களையும் புனித மரங்களாக கருதுகிறார்கள். அவற்றைப்பற்றிய பட்டியலும் சுருக்கமான விளக்கமும் இங்கு தருகிறோம்

### அதுவெ




இது ஒரு இலையுதிர் மரம். நீலகிரியில் 900மீட்டருக்கு மேல் பசுமை மாறாத காடுகளுக்கு அருகிலும், சோலை காடுகள் அருகிலும் காணப்படும். மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் பூக்கும்பொழுது இலை இல்லாமல் காணப்படும். பூக்கள் சிறியதாகவும், வெளிர்ப்பச்சையாகவும் இருக்கும். தேனீக்கள் இந்த பூக்களை மிகவும் விரும்பி மதுரம் சேகரிக்கும். பழங்கள் கசப்பாக இருக்கும் ஆனாலும் உண்ணதகுந்ததே.

### கன்னேரி - (ஜாமுன்)

பெரிய பசுமை மாறாத மரம். வறண்ட இடங்கள் தவிர்த்து மற்ற இடங்களில் வெகுவாக காணலாம். புது இலைகள் இளஞ்சிவப்பாகவும், முதிர்ந்தபின் சிவப்பாகவும் இருக்கும். பூக்கள் வெள்ளையாக அல்லது இளஞ்சிவப்பாக இருக்கும். சிறிது மணமுள்ளதாகவும் இருக்கும். மார்ச்சு, ஏப்ரல் மாதங்களிலும், மறுபடியும் ஜுலை, ஆகஸ்டு மாதங்களிளிலும் பூக்கும். தேனீக்களுக்கு மிகமுக்கிய ஆகாரம் ஆகும். பழங்கள் பச்சை அல்லது சிவப்பாக முதலில் இருந்து பிறகு நீல நிறமாக மாறிவிடும். கொட்டைகள் காயங்களிலிருந்து ரத்தத்தை நிறுத்தும் தன்மை வாய்ந்தது மேலும் கசப்பாக இருக்கும்.





### ஃகுல மாவு

1100 மீட்டரிலிருந்து 1900மீட்டர் வரை காணப்படும் பசுமை மாறாத மரம். பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை பூக்கும். மரப்பட்டையிலிருந்து சாறு வடியும். பழம் கரும் பச்சையாக இருந்து பிறகு சிவப்பாக மாறும்.

### ஃபைகெ - நீர்காய்ச்சி

சதுப்பு நிலங்களில் காணப்படும் நடுத்தர அளவிலான மரம். பட்டை சொறசொறப்பாகவும், செங்குத்தான பிளவுகளுடன் இருக்கும். இளஞ் குருத்துக்களும் இலைகளும் பட்டு போல் இருக்கும்.புது இலை வந்த பிறகு பூக்கும்.டிசெம்பர் மாதத்திலிருன்து மார்ச் மாதம் வரை பூக்கும். பூக்கள் ரோம மயமாக பாட்டில் பிரஷ் மரம் போல் இருக்கும். இந்த மரம் இருப்பது, நிலத்தில் நீர் ஆதாரம் இருப்பதற்கு அறிகுறி.



INTACH